**செ. கு. எண்:** 220 **நாள்**:01.12.2011

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – **1.12.2011**

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்து பரவலாக மழை பெய்து வருவதன் காரணமாக **30.11.2011** அன்று திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், கோளூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கோவிந்தன் என்பவரின் மனைவி திருமதி சின்னபொன்னு சுவர் இடிந்து விழுந்ததால் உயிரிழந்தார் என்ற செய்தியையும்**;**

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், அரசூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கன்னியப்பன் என்பவரின் மகன் விக்னேஷ்வரன் குளத்தில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்**;**

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டி வட்டம், சித்தேரி தரப்பு பேரேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. அண்ணாமலை என்பவரின் மனைவி திருமதி பார்வதி வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தார் என்ற செய்தியையும்**;**

புதுகோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், இசுகுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. சோலையன் என்பவரின் மகன் காளிமுத்து ஆற்றில் தவறி விழுந்து, ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தார் என்ற செய்தியையும்**;**

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், கிலங்காடு கிராமம், சேத்தியாத்தோப்பைச் சேர்ந்த திரு. பாண்டுரங்கன் என்பவரின் மகன் ராஜராஜன் ஆற்றில் குளிக்கச் சென்ற போது தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

கனமழை காரணமாக பல்வேறு விபத்துகளில் மரணமடைந்த இந்த ஐந்து நபர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா இரண்டு லட்சம் ரூபாய் உதவித் தொகையை உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**